### தொகுதியில் இரண்டு முறை பார்வையிட்டு நிவாரண உதவிகள் வழங்கிய முதல்வர் - அமைச்சர்களுக்கு நன்றி!

# தொகுதியில் உள்ள 7 ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியோடு இணைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் சோழிங்கநல்லூர் தொகுதி உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் கோரிக்கை!

**சென்னை. ஜூன் 27 - சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் பேசியதாவது-**

நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக, உள்ளாட்சி நிர்வாகத் துறையின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாநில முதல்வர் என்ற பொறுப்புடன் இந்தியா போற்றும் மாபெரும் தலைவராக திராவிட மாடல் என்னும் ஆட்சிக்கான இலக்கணத்தை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் இலட்சியங்களின் உருவமாக உழைப்பால் உயர்ந்த உன்னதத் தலைவர், உழைக்கும் மக்கள் உண்மைத் தோழர்; அழைப்பில் மகிழ்வார்; ஆதரவைத் தருவார்; கற்றவர் துணையுடன் களப்பணி செய்வர்; பற்றுடன் பகைவரும் பாராட்டி மகிழ்வார்; மற்றவர் செயல்களிலும் மாற்றம் நிகழும் கொற்றவன் மக்கள் புகழ் திட்டங்களை வகுத்து திறமையுடன் செயலாக்கும் சட்டசபை நிகழ்வுகள் சாதனைக்கு வழிவகுக்கும் சட்டங்கள் அனைத்தும் சாமானியரை உயர்விக்கும் மட்டற்ற மகிழ்வு மக்களுக்கு நிலைத்திருக்கும் திராவிட மாடல் ஆட்சியில் முதல்வர்களின் முதல்வராகத் திகழும் நம் தளபதி அவர்களுடைய பொற்கால ஆட்சிக்கு நற்சான்றாக நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 மாபெரும் வெற்றியைக் குவித்து குறிப்பாக, சோழிங்கநல்லூர் தொகுதியில் 95,609 வாக்குகள் அதிகம் பெற்று தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் அவர்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த சோழிங்கநல்லூர் தொகுதி வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிரிகளே இல்லை என்று அரசியலில் இருந்தவர்கள் உண்டு. ஆனால் எதிரிகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசியல் நடத்தும் முதிர்ச்சியும் மக்கள்தான் ஜனநாயகத்தின் எஜமானர்கள் என்பதை மறக்காமல் அரசியலில் கலைஞரிடம் பெற்ற பயிற்சியால் நமது முதல்வர் அவர்கள் தலைமையிலான ஆட்சிக்கும் முதல்வரின் எண்ணங்களுக்கு ஏற்ப மக்கள் பணியாற்றிவரும் தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கை சூரியனாகத் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எங்களை வழிநடத்திச் செல்லும் அமைச்சர் மா. சுப்பிரமணி யன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைச்சரவை நம்முடைய முன்னவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடாவுக்கும் இந்த அவையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### 105 ஏக்கரில் மெகா விளையாட்டரங்கம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

இளைஞர்களின் நீண்ட நாள் கனவான செம்மஞ்சேரியில் 105 ஏக்கர் நிலத்தில் மெகா விளையாட்டு நகரம் அமைக்க உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், இந்த நேரத்திலே இளைஞர்களின் சார்பாக நன்றி நன்றி என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர மாநகராட்சிப் பகுதியில் அனைத்து வார்டுகளும் முழுமை பெறுகின்ற வகையில் நீண்ட நெடுநாட்களான கோரிக்கைகள், பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கல் திட்டம், மழைநீர் வடிகால்வாய், சாலைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், குளங்கள் மேம்படுத்துதல், எரிவாயுத் தகன மேடைகள் போன்ற எண்ணற்ற பணிகளை 3 ஆண்டுகளில் நிறைவேற்றித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத்திற்கும், மாநகராட்சிக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

கடந்த கால ஆட்சியிலே 2015 ஆம் ஆண்டு சென்னையில் 22 சென்டிமீட்டர் அளவு மழை பெய்து, மழையின் காரணமாக வீடுகளில் வெள்ளம் புகுந்ததால், பொதுமக்கள் சுமார் 10 நாட்களுக்கு போக்குவரத்து முடங்கி இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, உணவு, பால்கூட கிடைக்காத நிலைகள் ஏற்பட்டது. ஆனால், சென்ற ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில் டிசம்பர் மாதம் சென்னையில் 46 சென்டிமீட்டர் அளவில் மழை பெய்த பெரும் மழையால் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி இரண்டு மூன்று நாட்களிலே பொதுமக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினார்கள். இதற்கு உதாரணம் நான் சார்ந்திருக்கின்ற சோழிங்கநல்லூர் தொகுதியில் இந்த மழை பாதிப்பிலிருந்து பொதுமக்கள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பக் காரணமாக தொகுதிக்கு இரண்டுமுறை வருகை தந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு நிவாரணங்கள் வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நலத்திட்டங்கள், பாதிக்கப்பட்ட பணிகளை விரைந்து முடிக்க மூத்த அமைச்சர்கள் எ.வ. வேலு, கே.என்.நேரு, சி.வி.கணேசன், சிவ.வீ. மெய்யநாதன், திருமதி பி. கீதா ஜீவன் மற்றும் அமைச்சர் பெருமக்களோடு பணியாற்றி உறுதுணையாக இருந்த எங்கள் அமைச்சர் மா. சுப்பிரமணியன், தா. மோ.அன்பரசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப் பாண்டியன், மேயர், துணை மேயர், மாநகராட்சி ஆணையர், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சியினுடைய அலுவல் பெருமக்கள் அனைவருக்கும் இரவுபகல் பாராமல் பணியாற்றி பேருதவி செய்த தன்னார்வலர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நகராட்சி நிர்வாகம் இதுவரை இல்லாத அளவிற்கு நிதியை ஒதுக்கி கலைஞர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக ஊராட்சிகளை, பேரூராட்சிகளை, நகராட்சிகளை மாநகராட்சியோடு இணைத்தாரோ, அதை நிறைவேற்றுகின்ற வகையில் நகராட்சி நிர்வாகம் பல திட்டங்களை நிறைவேற்றி, மக்களுடைய நன்மதிப்பைப் பெறுவதற்கு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டுகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் விடுபட்ட 835 தெருக்கள், குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் விடுபட்ட 773 தெருக்கள் *left out area*



மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான நிதி யொதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

### மக்களுடைய நன்மதிப்பு!

திராவிட மாடல் ஆட்சியில் 3 ஆண்டுகளில் நான் அவையில் வைத்த தொகுதி சார்ந்த கோரிக்கைகளின் அடிப்படையில், பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஒருசில கோரிக்கைகள் நம்முடைய தொகுதியில் இருந்தவண்ணம் மக்களுக்காக பணியாற்று வதற்கு தமிழகத்தினுடைய முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின்கீழ் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகளை இன்றைக்கு சோழிங்கநல்லூர் தொகுதியில் அதிகப்படியாக பயன்பெற்று வரும் மக்கள் தொகுதியில் நீதிமன்றங்கள், பத்திரப் பதிவு அலுவலகம், உணவுப்பொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், கூட்டுறவு வங்கி ஆகியவற்றை அரசுக் கட்டடத்தில் கொண்டுவர வேண்டுமென பல முறை மன்றத்தில் வைத்துள்ளேன். இந்த நிலையில் நூக்கம்பாளையம் சாலை, சோழிங்கநல்லூர் சர்வே எண் 574ல் 62 ஏக்கர் நிலப்பரப்பில் தனி நபர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து வருவாய்த் துறையின் மூலம் கையகப்படுத்தப் பட்டு, இந்த இடத்தை CMRL க்கு சென்னை மெட்ரோ இரயிலுக்கு 60.5 ஏக்கரும், குடிநீர் வாரியத்திற்கு 1.5 ஏக்கரும் வழங்கப் பட்டுள்ளது. இதில் CMRL இடம் வழங்கப்பட்ட இடத்தில் 10 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, மேற்கூறிய அலுவலகங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் அரசு ஒருங்கிணைந்த வணிக வளாகத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள் கின்றேன்.

சோழிங்கநல்லூர் சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 80 MLD குடிநீர் வழங்கப்படுகிறது. அது மக்களின் தேவைக்கு ஏற்றாற் போல் இல்லை. எனவே, மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் கூடுதலாக 50 MLD குடிநீர் வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சிக்கு அருகில் நகரத்திற்கு இணையாக புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம் மற்றும் ஒட்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிகள் சென்னை நகருக்கு ஈடாக கட்டடங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வளர்ந்து வருகின்றன. இந்தப் பகுதிகளை தாம்பரம் மாநகராட்சியோடு இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அங்கு வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் சென்னை மாநகராட்சியோடு இணைக்க வேண்டுமென்று கோரிக்கை கள் வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக வும் தீர்மானங்கள் நிறைவேற்ற முன்வந்துள்ளார்கள். மேலும், பெரும்பாக்கம் ஊராட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக சென்னையிலிருந்து 30,000 குடும்ப ங்களுக்கு மேல் மக்கள் மறு குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களும் சென்னையை ஒட்டியுள்ள பகுதிகளாக இருப்பதனால் இதை சென்னையோடு சேர்க்க வேண்டுமென்று மக்களுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

### வீட்டு மனை பட்டா வழங்கிடுவீர்!

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, உத்தண்டி, உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம், பெருங்குடி, கந்தன்சாவடி, பள்ளிக்கரணை, ஜல்லடியன்பேட்டை, ஒக்கியம் துரைப்பாக்கம், காரப்பாக்கம், சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி ஆகிய பகுதிகளில் நீண்ட நெடும் நாட்களாக மக்கள் கிராம நத்தம், தரிசு மற்றும் அரசு இடங்களில் நீண்ட நாட்களாக குடியிருந்து வருபவர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படாமல் உள்ளது. அதேசமயத்தில் 2006 - 2011 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் வழங்கப்பட்ட பட்டாக்களை கிராமக் கணக்கிலும், கணினியிலும் பதிவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

பாலவாக்கத்திலுள்ள ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவமாணவியர்கள் பயின்று வருகின்றனர். அந்தப் பள்ளியில் கிழக்கு கடற்கரைச் சாலை விரி வாக்கம் அமைவதால் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக சாலையை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதால், அப்பள்ளியின் முழுக் கட்டடங்களும் அப்புறப்படுத்தும் சூழல் ஏற்பட்டுள்ளது. மாணவமாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு வேறு இடம் ஒதுக்கீடு செய்து புதிய பள்ளியை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேடவாக்கம் அரசுப் பள்ளியில் 1,201 மாணவர்களும், 1,014 மாணவியர்களும் என மொத்தம் 2,235 பள்ளியில் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளியில் பெண்களுக்கென தனியாக பிரித்தால் பள்ளிக் கல்வித் துறைக்கு எந்தக் கூடுதல் செலவினமும் ஏற்படாது. இந்தப் பள்ளி 2 இடங்களில் நடைபெறுவதால் கூடுதல் வகுப்பறைகளும், போதிய ஆசிரியர்களும் உள்ளனர். அந்தப் பள்ளிக்கு உத்தரவு அளிப்பதற்காக 2012 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தி, அதனுடைய சாத்தியக்கூறு விவரங்கள் உயரதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பள்ளியை ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனியாக இரண்டாகப் பிரித்து உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### செம்மஞ்சேரி - கண்ணகி நகரில் 51.652 வீடுகள் சீரமைப்பு!

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலமாக கண்ணகி நகர், எழில் நகர், செம்மஞ்சேரி, பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள மொத்த குடியிருப்புகள் 51,652. அதில் 21,364 குடியிருப்புகளைச் சீரமைக்கும் பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவடை ந்துள்ளன. மீதமுள்ள 28,172 குடியிருப்புகளைச் சீரமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒக்கியமேடு பாலத்தை அகலப்படுத்திட வேண்டும். நாராயணபுரம் ஏரிக் கரையின் மேல்பகுதியில் இரண்டு சிறிய அளவிலான தனியார் கோயில்கள் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ளதை அகற்றி, உள்பகுதியில் கான்கிரீட் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, காலை சிற்றுண்டித் திட்டம் மூலமாக, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம், சென்னை மாநகராட்சி மூலமாக சிறப்பான முறையில் உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஊராட்சிகளிலிருந்து, அந்தந்த ஊராட்சிப் பகுதிகளில் காலைச் சிற்றுண்டி வழங்கப்படுவதால், அது சரியான முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் அவர்கள் சிற்றுண்டி வழங்குவதைப் பராமரிப்பதற்கும், பார்வையிடுவதற்கும் சிரமங்கள் இருக்கின்றன. சென்னை மாநகராட்சியைப் போல, ஊராட்சிப் பகுதிகளிலும், BDO அலுவலகம் அளவில் *centralise* செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

### வட்டாட்சியர் அலுவலகத்தை இரண்டாக பிரித்திடுவீர்!

அதேசமயத்தில், சோழிங்கநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை பள்ளிக்கரணையைத் தலைமையிடமாகக் கொண்டு, இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மருத்துவத் துறையில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்ற தமிழக அரசு, செயற்கை கருத்தரித்தல் மையம் என்பதனை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தென்னிந்தியாவிலேயே முதல்முறையாக அரசு மருத்துவமனையில் தொடங்கியுள்ளது.

இதற்கு தனியார் மருத்துவமனைகளில் 7 முதல் 10 இலட்சம் ரூபாய் செலவாகும் நிலை உள்ளது. ஆனால், நமது கழக ஆட்சியில் அரசு மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக சிகிச்சை மேற்கொள்கின்ற வகையில் செய்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், அந்த துறை சார்ந்த அமைச்சருக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

### பெருங்குடி ஏரிக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கியதற்கு நன்றி!

ஒரே ஒரு *line* தான். மேற்குறிப்பிட்ட இந்த 7 ஊராட்சிகளுக்கு CMDA மூலமாக சாலைகள் மற்றும் மழைநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கும், அதே சமயத்தில் நேற்றைய அறிவிப்பில் பெருங்குடி ஏரிக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஏரியை மேம்படுத்திட வழி செய்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை மாநகராட்சி மூலமாக மழைக்குமுன், இது மிக முக்கியமானது, மழைக்கு முன், பழைய மழைநீர்க் கால்வாய்களைத் தூர் வாரி அகற்றுவதற்கு ஒப்பந்தம் மூலமாக ஒப்பந்தாரர்களிடம் பணிகளை வழங்கும்போது, அந்த ஒப்பந்ததாரர்கள் ஒருசில நாட்களில் மட்டும் சில தெருக்களை சுத்தம் செய்து விட்டு, மீதி தெருக்களை விட்டுவிடுகி ன்றார்கள்.

அதற்குப் பின் ஒரு வருடம் கழித்து மீண்டும் மழை வந்தால், அந்தக் கால்வாய்களைத் தூர் வாருவதற்கு ஆட்கள் இல்லாத நிலை உள்ளது. இந்தப் பணிகளை தினந்தோறும் செய்யும் வகையில், ஒரு வட்டத்திற்கு அல்லது ஒரு மண்டலத்திற்கு என ஆட்களை நியமித்து, அரசுக்கும் கூடுதலாக செலவினம் இல்லாமல், 100 சதவிகிதம் கூடுதல் செலவினங்களைக் குறைத்து, பணிகளை முடிப்பதற்கு ஆட்களை நியமிக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் அளிக்கின்றேன். அந்தத் தொகுதிக் கோரிக்கைகளை எல்லாம் நான் படித்ததாகக் கருதி, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, தமிழகத்தினுடைய முதலமைச்சர், தொகுதிக்காக பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றித் தந்திருக்கின்றார்.

தமிழக மக்களுக்குப் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றித் தந்தாலும், தமிழகத்தில் மிகப் பெரிய தொகுதியாக இருக்கின்ற சோழிங்கநல்லூர் தொகுதி மிகப்பெரிய பங்கைப் பெற்று, அதற்கான நலத் திட்டங்களைப் பெற்றிருக்கிறது என்ற பெருமையோடு, உங்களோடு நானும் ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றுவதில், தமிழகத்தின் முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு நன்றி, நன்றி, நன்றிகூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பேசினார்.



விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி பாகம் 136. நரசிங்கனூர் பகுதி விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அன்னூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்துக்கு மண்டல குழுத் தலைவர் எம்.சந்திரன், பகுதிச் செயலாளர் ப.குணாளன், ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஆகியோர் வாக்குகள் சேகரித்தனர். உடன் புருஷோத்தமன், கிளைச் செயலாளர் ரமேஷ், மற்றும் சாலமன், முரளி கிருஷ்ணன், ஏசுதாஸ், பிரான்சிஸ், ரமணன் விக்கி, ஸ்ரீதர், குமார் ஆகியோர் இருந்தனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் மேற்கு மாவட்டக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட விக்கிரவாண்டி பேரூரில் உள்ள பூத்துகளில் ”கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மங்களூர் ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீ. அமிர்தலிங்கம், பா.செங்குட்டுவன், விருத்தாசலம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் தி.வேல்முருகன், மங்களூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கே.என்.டி.சங்கர், மேட்டூர் அ.சேகர், மாங்குளம் வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### விஜயா தாயன்பன் வரவேற்பில் – வாகை சந்திரசேகர் தலைமையில் – மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில்

# தமிழ்நாடு இயல்இசை நாடக மன்றம் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - டாக்டர் எஸ்.தணிகாசலம் - இந்து என். ராம் - ஜி.விசுவநாதன் - டி.எல்.மகாராஜன் சிறப்புரை

சென்னை, ஜூன் 27 - தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (கலைஞர் பண்பாட்டு இயக்கம்) சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 29.6.2024 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில் நடைபெறுகிறது.

மாலை 6 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்திற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் விஜயா தாயன்பன் வரவேற்றுப் பேசுகிறார். மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகித்துப் பேசுகிறார். மயிலை சட்டமன்ற உறுப்பினர் த.வேலு முன்னிலை வகித்துப் பேசுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாப் பேருரையாற்றிட, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் , டாக்டர் எஸ்.தணிகாசலம் (மேனாள் துணை வேந்தர், இராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை), ‘தி இந்து’ என்.ராம், வேலூர் வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் ஜி.விசுவநாதன், முன்னணி இசைக் கலைஞர் டி.எல்.மகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முன்னதாக மாலை 4.30 மணிக்கு ஆர்.கஜேந்திரன் குழுவினர் வழங்கும் பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், காளையாட்டம், சுரேஷ் குழுவினரின் தேவராட்டம், வித்யா குழுவினர் வழங்கும் கரகாட்டம், நையாண்டி மேளம் ஆகிய கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாலை 5.30 மணிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் பாடல்கள் - கலா ப்ரதர்ஷினி குழுவினரின் நடனம் நடைபெறுகிறது.

### கூட்டுறவு ஒன்றிய அலுவலக வளாகத்தில்

# ரூ.48 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன்.27 முத்தமிறிஞர் கலைஞர், நூற்றாண்டு நிறைவு விழாவினை நினைவு கூரும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலக வளகத்தில் ரூ.48 லட்சம் மதிப்பில் கட் டப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம் “வானவில்” கூட்டரங்கத்தை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை நினைவு கூறும் வகையில் சென்னை சேத்துப்பட்டில் உள்ளதமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலக கட்டடத்தின் 4ஆவதுதளத்தில் அமைக்கப்பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம் வானவில்” கூட்டரங்கத்தை நேற்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை நினைவு கூறும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகம், என்.வி.என்.மாளிகை வளாகத்தை பசுமை வளாகமாக” மாற்றும் நோக்கத்திலும், கூட்டுறவுத்துறை சார்ந்த அலுவல் கூட்டம் நடைபெறும் போதுமாநிலம் முழுவதும் உள்ள துறை அலுவலர்கள் பங்கேற்கும் வகையிலும், அதன் 4ஆவது தளத்தில் 4000 சதுர அடியில் 200 இருக்கைகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு நினைவரங்கம் “வானவில்” கூட்ட ரங்கம் சுமார் ரூ.48லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்ட அரங்கத்தின் மேற்கூரையில் 78 கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் வகையில் சூரிய ஒளி தகடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அலுவலக கட்டடம் முழுவதற்கும் சூரியஒளி மின்சக்தி பயன் படுத்தப்படவுள்ளது.

இதன் வாயிலாக ஒரு நாளைக்கு 312 யூனிட் மின்சாரம் என்ற அடிப்படையில் ஒரு மாதத்திற்கு 9.300 யூனிட் மின்சாரம் கிடைக்கும். வர்த்தக மதிப்பில் ஒரு யூனிட் ரூ.8.70 வீதம் சுமார் ரூ.80,000/-வரை சேமிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு. உணவு மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் என்.சுப்பையன். கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) ஜே.விஜயராணி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் எஸ். சுப்பிரமணியன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. மணிமேகலை

### ஜூன் 27 (2017)



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**மொரட்டூர் கிளைச் செயலாளர், மீஞ்சூர் ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களை திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தொடங்கி மகளிரின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**